# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:3 Issue : 11 July 2021*
கோட்டை :3 வாயில்:11 ஜூலை 2021

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X

# Aran

International e Journal of Tamil Research

ISSN: 2582-399X



## ஆசிரியர் குழு

முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் **(Peer Review)**பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

அனைவருக்கும் வணக்கம்

நமது அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் மூன்றாவது ஆண்டில் (2021) அடி எடுத்து வைக்கின்றது. எங்களுடன் பயணித்த அனைத்து பேராசிரியர் பெருமக்களுக்கும், துறைசார் வல்லுநர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் எங்களது பணிவான நன்றியை தெரிவித்துக்கின்றோம். தொடர்ந்து உங்களது ஆதரவை எங்களுக்கு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.நன்றியும் பேரன்பும்.

*Hi everyone*

*Aran Internaitional e Journal of Tamil Research continuings way into third year(2021) . We area greatful to all the professors,academics and research students who travelled with us. We warmly request you to continue to support us . Thank you with Love.*


அன்புடன்

முனைவர். பிரியாகிருஷ்ணன்

நிறுவனர்/பதிப்பாசிரியர்/நிர்வாகஆசிரியர்,

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*www.aranejournal.com*

*aranjournal@gmail.com*

*PH: +917299587879*

# அகத்தினுள்


**பத்துப்பாடல்கள் சுட்டும் இசைக் கருவிகள்**
திரு. மதி ஜனனி செந்தூரன்

**குறுந்தொகையில் உவமைச் சிறப்பு**
முனைவர் மு. விஜயலெட்சுமி,

**குறுந்தொகைக் காட்டும் தகையணங் குறுத்தல்**
முனைவர் த.தேவகி

**தமிழரின் கடல் எல்லை தாண்டுதலும், பெண்கடல் செலவு மறுப்பும்**
முனைவர் இரா. ஜெயஸ்ரீ

**கம்பன் விருத்தங்களில்யாப்பு**
முனைவர். ஜெ. கவிதா.

**சிலப்பதிகாரம் காட்டும் சமூகம்**
முனைவர். ரா. ராமேஸ்வரி

**திருக்குறள் காட்டும் பகைவெறி எதிர்ப்பியல் சிந்தனைகள்**
திருமதி சு.சத்யா

**ஆசாரக் கோவையும் அறிவியலும்**
முனைவர் பெ.இராஜலட்சுமி

**ஏலாதி கூறும் வாழ்வியல் அறங்கள்**
முனைவர் க.அலமேலுமங்கை

**அணி இலக்கண நோக்கில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**
திருமதி.பா.தீபா

**விவிலியமும் சித்தர் இலக்கியமும் கூறும் மனித படைப்பு**
ச.சு.அருள்பிரகாஷ்

**இயேசு பிறப்புக் கதைப்பாடல்கள்**
தா.மதன்



முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்


**முகம் மலர்தலே விருந்தோம்பலின் முதன்மைப் பண்பு**
முனைவர் க. மங்கையர்க்கரசி

**சிற்பங்கள் காட்டும் கொற்றவை வழிபாடு**
கி. சரவணன்

**கைவல்ய நவநீதத்தில் பிரம்மம் பற்றிய கருத்தியல்கள்**
முனைவர் சயனொளிபவன். முகுந்தன்

**ஞானசம் பந்தரின் வருகையும் திட்டக் குடியும்**
முனைவர் பெ.சுப்ரமணியன்

**இந்துப் பண்பாட்டு மரபில் பெண்கள் நிலை-வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்ட நோக்கு**
கலாநிதி விக்னேஸ் வரிபவநேசன்

**உள்ள வழிபாடுகளே உருவ வழிபாடுகள்**
மு.பெருமாள்

**பிடுங்கி நடப்பட்ட நிலத்தில் முளைக்கத்துடிக்கும் உயிர்ப்பின் பச்சை..**
**(புகலிடக் கவிதைகளின் செல்தடம் குறித்த ஆய்வு**
பேரா.தெ.வெற்றிச்செல்வன்

**டாக்டர்தா.ஏ.ஞா. அவர்களின் இலக்கியத் திறனாய்வியல் நூலின் ஓட்பநுட்பங்கள்**
முனைவர் வே. விக்னேசு

**நெடுங் குருதி நாவல் காட்டும் களவும் கள்வர்வாழ்வும்**
முனைவர் அ.ரேவதி.

**ஜெயமோகனின் நாவற்கோட்பாட்டு விதிகளும், அவருடைய நாவல்களும்**
**(ஜெயமோகனின் 'நாவல்' இலக்கியத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**
முருகையா சதீஸ்



முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்


**தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்**
முருகையா சதீஸ்

**தூப்புக்காரி நாவலும் கதைமாந்தர்களும்**
வினோ ராஜ். லா

**இலக்கியங்கள் முன்னெடுக்கும் பொதுமக்கள் நுகர்வுப் போக்கு**
முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி.

**தமிழ் மொழி: கற்றலின் தேவையும் கற்பித்தலில் சிக்கலும் - சிலவிவாதங்கள்**
முனைவர் அ.இலட்சுமிதத்தை.

**அழகர் குறவஞ்சியில் இயல் இசைச் சிறப்புகள்**
முனைவர் செ.லலிதாம்பாள்

**சீவகசிந்தாமணி-நடன நோக்கில் விமலியார் இலம்பகம்**
முனைவர் ஜி.ஜே. லீமாரோஸ்

**சிலப்பதிகாரம் கூறும் விலக்குறுப்பும் நடன வடிவமைப்பும்**
முனைவர் கு.சகாயராணி

**THE GREAT EXHIBITION OF THE INDUSTRY AND ART OF ALL NATIONS (LONDON, 1851)**
Dr. S. Purushothaman

**உடுமலை பீரங்கி வார இதழ் - ஓர் ஆய்வு**
முனைவர் ப. கற்பகவள்ளி

**சங்ககாலம் - சேலம் மாவட்டம் ஒருபார்வை**
முனைவர் இரா.ரமேஷ்

**உயிருடன் புதைக்கப்பட்டப் பெண்கள் -தாமரைப் பாக்கம் கல் வெட்டுகள் முன் வைத்து மீள்பதிவு**
முனைவர் பிரியாகிருஷ்ணன்



முகப்பு

புகைப்படம் இணையம்

நன்றி


தமிழ்

# குறுந்தொகைக் காட்டும் தகையணங்குறுத்தல்

**முனைவர்.த.தேவகி**

**துறைத்தலைவர்,**

**தமிழாய்வுத்துறை,**

**தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும்**

**அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**

**பெரம்பலூர் - 621212**

**ஆய்வுச்சுருக்கம்:**

காலந்தோறும் ஆண் பெண் இருபாலரும் காதல் வயப்படுதல் என்பது இயல்பான ஒன்று. காதல்கொண்ட தலைவன் தலைவியின் அழகினை எண்ணி புலம்புவதும்,வருந்துவதும் இன்றுவரை நடைபெற்றுவருகிறது. இத்தகைய மனவருத்தம் குறுந்தொகையில் சித்தரிக்கப்பட்டுள்ள விதத்தினை அறியும்பொருட்டு இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொல் :**

தகையணங்குறுத்தல் விளக்கம், தலைவனின் மனநிலை, திருக்குறள் கருத்துக்கள், கருவி

**முன்னுரை:**

தமிழர்களின் வாழ்க்கை காதலும் வீரமும் நிறைந்தது. மறத்தமிழன் என்று சொல்லும் அளவிற்கு வீரம் மிகுந்திருந்த தமிழர்களிடம் அதே அளவு காதலும் மிகுந்திருந்தது என்பதற்கு நமது இலக்கியங்களும்;, இலக்கணங்களும்; சான்று பகர்வதாய் உள்ளன

**…செம்புலப் பெயல்நீர்போல**

**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே 1**

என சங்க இலக்கியமும்

**நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத்தற்குக்**

**கூட்டியுரைக்கும் குறிப்புரையாகும் 2**

அதாவது தலைமக்கள் இருவரின் நோக்கும் அவரவர் தம் கருத்துக்களை காதல் உணர்வினைக் கூட்டியுரைக்கும் குறிப்புரைகளாகும், என தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றன. காதல் வயப்பட்ட தலைவனின் வருத்தத்தைச் சொல்லுவதாக அமைந்த தகையணங்குறுத்தல் செய்திகள் குறுந்தொகையில்; அமைந்துள்ளன.

**தகையணங்குறுத்தல் - விளக்கம்**

அணங்கு என்பது பெண்,தகை என்பது அழுகு,உறுத்தல் என்பது மனதை வறுத்துதல் எனும் பொருளில் வந்து .தான் விரும்பும் பெண்ணின் அழகு தன் மனதை வருத்துகின்ற துன்பத்தை எடுத்துச்சொல்லுவதாக அமைந்துள்ளது. இதில் அணங்கு என்ற சொல் நயம்கருதி இடையில் வைக்கப்பட்டுள்ளது. இதனை திருவள்ளுவர் திருக்குறளில் காமத்துப்பாலில் ஒரு அதிகாரமாகப் படைத்துள்ளார். அகக்கருத்துக்களை எடுத்துக்கூறும் தொல்காப்பிய பொருளதிகாரத்திலோ,நம்பியகப்பொருளிலோ இச்சொல் இடமபெறவில்லை. ஆனால் இத்தகைய நிகழ்வுகள் குறித்த செய்திகள் நூல்களில் இடம்பெற்றுள்ளன.

**வண்டே இழையே வள்ளி பூவே**

**கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று**

**அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ**

**நின்றவை களையும் கருவி என்ப 3**

தலைவன் தலைவியைக் பார்த்தமாத்திரத்தில் அவளது அழகில் மயங்கி அவள் அணங்கோ என நினைத்துப் பின்னர் அவள் சூட்டியுள்ள பூவில் வண்டுகள் ரீங்காரம் செய்வதாலும், அணிகலன்கள் அணியப் பெற்றிருப்பதாலும், தோளின்கண் எழுதப்பெற்றுள்ள தொய்யிற்கொடியும் மூடித்திறக்கும் இமையாலும் அவள் அணங்கு அல்ல என்ற ஐயத்தைப் போக்கி மானிட மகளிர் என்ற தெளிவை தரும் என்கிறார் தொல்காப்பியர். அத்தகைய அழகைக் கண்டு தலைமகன் வருந்துவான் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது.நம்பியகப்பொருளில் களவியலிலும் இத்தகைய செய்தி இடம்பெற்றுள்ளது.

**எழுதிய வல்லியும் தொழில்புனை கலனும்**

**வாடிய மலரும் கூடிய வண்டும்**

**நடைபயில் அடியும் புடைபெயர் கண்ணும்**

**அச்சமும் பிறவும் அவன்பா னிகழும்**

**கச்சமில் ஐயங் கடிவனவாகும் 4**

இக்கருத்தும் தொல்காப்பியத்தை அடியொற்றியதாக உள்ளது. இந்த ஐயத்திற்கு பின் தலைவனின் வருத்தம் பொதிந்துள்ளது என்பது நாம் உணந்து கொள்ளவேண்டிய ஒன்று.

**தலைவனின் மனநிலை**

இலக்கணங்களில் ஐயமாக இடம்பெற்றுள்ள செய்திகள் பின்னர் இலக்கியங்களில் துன்பமாக,வருத்தமாக மாறி தலைமகனின் மனநிலையைச் சித்தரிப்பதாக வரிவடைந்துள்ளதை பல்வேறு இலக்கியங்களில் காணமுடிகியது. திருவள்ளுவர் தலைமகளால் அவளது அழகினால் தலைவனுக்கு ஏற்படும் மன வருத்தத்தை தகையணங்குறுத்தல் என்று தனி ஒரு அதிகாரமாகப் படைத்துள்ளார்.

**அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**

**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு 5**

என தொல்காப்பியரின் இலக்கணத்திற்கு இலக்கியம் படைத்திருப்பது போன்ற கருத்துக்களை யாத்துள்ளார். ஆண்களின் மனதை வருத்தும் பெண்களின் அழகினை எடுத்துச் சொல்லும் வரிகள் நாலடியாரிலும் இடம்பெற்றுள்ளன.

**கண்கயல் என்னும் கருத்தினால் காதலி**

**பின்சென்றது அம்ம சிறுசிறல்- பின் சென்றும்**

**ஊக்கி யெழுந்தும் எறிகல்லா ஒண்புருவம்**

**கோட்டிய வில்வாக் கறிந்து 6**

மீன்கொத்திப் பறவைகளையும் மயங்க வைத்து பயமுறுத்தும் கண்களாக வருணித்துள்ளனர்

அறநூல்கள் என்றழைக்கப்படும் கீழ்க்கணக்கு நூலகள் பெண்ணின் அழகினையும் அதனால் ஏற்படும் மன அவத்தைகளையும் எடுத்துரைக்கும்போது அக இலக்கியங்கள் என்று அழைக்கப்படும் குறுந்தொகையில் இத்தகைய கருத்துக்கள் நிறைந்திருத்தல் திண்ணம்.

**குறுந்தொகையில் தகையணங்குறுத்தல்:**

தகையணங்குறுத்தல் என்ற சொல் குறுந்தொகையில் இடம்பெறவில்லை என்றாலும் பெண்களின் அழகினைக் கண்டு மனம் மயங்கி வருந்தும் தலைவனின்

மனநிலை பற்றி புலவர்கள் பாடியுள்ள பாடல்கள் குறுந்தொகையில் வெகுவாக இடம்பெற்றுள்ளன.

குறுந்தொகையில் கடவுள் பாடியதாகச் சொல்லப்படும் இரண்டாவதாக அமைந்துள்ள பாடலில்

**…. செறியெயிற்று அறிவை கூந்தலின்**

**நறியவும் உளவோ நீயறியும் பூவே 7**

என்ற வரிகள் தலைவியின் கூந்தல் மணத்தில் மயங்கிய தலைவனின் புலம்பலைச் சொல்லுவதாகப் படைக்கப்பட்டுள்ளது. கடவுளும் மனம் மயங்கிய செய்தி காதலின் அவத்தையைச் சொல்லுவதாகவும், தொல்காப்பியர் சுட்டியள்ள ஐயத்தை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

**தகையணங்குறுத்தும் கருவி**

பெரும்பான்மையான இலக்கியங்கள் பெண்களின் கண்கள் தான் ஆண்மக்களுக்கு அதிக வருத்தத்தைத் தருகின்ற கருவியாக இருக்கின்றன என சித்திரிக்கின்றன. குறுந்தொகையிலும் குறிஞ்சித் திணையில் அமைந்த பாடலொன்றில் தலைவனின் மாறுபாட்டை அறிந்த பாங்கன் வினாவ தலைமகன் சொல்லுவதாக அமைந்த பாடலொன்றில்

**பூவொத் தலமரும் தகைய ஏவொத்து**

**எல்லாரு மறிய நோய்செய் தனவே**

**தேமொழித் திரண்ட மென்றோள் மாமலை**

**பரீஇ வித்திய ஏனல்**

**குரீஇ ஒப்புவாள் பெருமழைக் கண்ணே 8**

அதாவது தாமரைப்பூப் போல சுழலுந் தகையவாய் மகிழ்ந்து பின்னர் அம்பினை நிகர்த்து நோவினைச் செய்தன தேன் போன்ற மொழியினையும், திரண்ட மெல்லிய தோளையுமுடையாளாய் பெரிய மலையிடத்து விரும்பி விதைத்த தினையிடத்துக் குருவிகளை ஓட்டுவாளது பெரிய குளிர்ந்த கண்கள் என தலைவன் தனது மனநிலையை முன்வைப்பதாகவும் அதற்குக் காரணம் தலைவியின் கண்கள் என்பதும்

**பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்**

**பெண்தகையால் பேமர்க் கட்டு 9**

என்ற வள்ளுவரின் குறளோடு ஒப்பு நோக்கத் தக்கது. மேலும் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து மீளும் தலைவன்

**சிறுவெள் அரவின் அவ்வரிக்குருளை**

**கான யானை அணங்கி யாஅங்கு**

**இளையன் முளைவாள் எயிற்றுள்**

**வளையுடைக் கையெளம் அணங்கி யோளே.10**

சிறிய மெல்லிய கீற்றக்களை உடைய அரவினது குட்டி காட்டிலுள்ள யானையை வருத்தினாற்போல சிறிய பற்களையுடைய வளையினையடைய கையினவளுமான ஓர் சிறுமகள் எம்மை வருத்தியவள் என்று கூறுவதாக சத்திநாதனார் குறிஞ்சித்தினைப் பாடல் மூலம் தரும் விளக்கமானது தகையணங்குறுத்தலுக்குத் தக்க சான்றாய் அமைந்தள்ளது.

**கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்**

**பேதைக்கு அமர்த்தன கண் 11**

பார்த்தவரின் உயிர்க்குடிக்கும் கவர்ச்சி கொண்டவை பெண்களின் கண்கள் அவை பார்ப்போரிடம் போர்செய்கின்றன என்று பெண்களின் விழிகனால் பெறும் வலியினை வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர். அத்தகைய வலிகளுக்கு மருந்துகள் இல்லை என்ற பொருள்படும்படி அமைந்துள்ளது பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன் பாடல் வரிகள்

**…படிய உண்டிப் பார்ப்பன மகனே**

**எழுதாக் கற்பின் நின்செய லுள்ளும்**

**பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்**

**மருந்தும் உண்டோ மயலோ இதுவே 12**

பிரிந்தாரை சேர்க்கும் மருந்தும் இருக்கிறதா? என வருத்தத்தின் ஆழத்தை உணர்த்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**முடிவுரை:**

பெண்களின் அழகினை வருணித்தல் என்பது சங்க காலம் தொட்டு இக்காலம் வரையிலும் கவிஞர்களிடையே நிறைந்து கிடக்கும் ஒரு கலை. அந்த அழகு ஆண்களை காதல் வயப்படுத்துகிறது, காமத்தின் வயப்படுத்துகிறது என்பதும், அது மிகுந்த துன்பத்தைத் தருகிறது என்பதும் தகையணங்குறத்தல் என்ற அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இச்சொல்லின் பயன்பாடு இன்றி இத்தகைய நிகழ்வுகள் ஆரம்ப காலம்தொட்டு இருந்துவந்திருக்கின்றன. அக இலக்கியமாக போற்றப்பட்டு வரும் குறுந்தொகையில் நெஞ்சொடு கிளத்தல்,பாங்கர்க்கு சொல்லியது,பாகனுக்குச் சொல்லியது, தோழிக்குச் சொல்லியது என பல்வேறு துறைகளில் குறிஞ்சித்திணையில் தலைவியின் அழகும் அதனைக் கண்ட தலைவனின் மனநிலையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது தகையணங்குறுத்தும் செய்திகள் குறுந்தொகையில் பரவிக்கிடப்பதை காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்:**

*1.திருக்கண்ண பரத்தலத்தான் -குறுந்தொகை மூலமும் உரையும் -பா.எ-40 ப.67*

*2. ச.பாலசுந்திரம் உரை -தொல்காப்பியம் பொருள் அதிகாரம் -சூ.96*

*3. மேலது -தொல்காப்பியம் பொருள் அதிகாரம் -சூ.92*

*4. கழக வெளியீடு -நம்பியகப்பொருள் விளக்கம் - சூ.121-ப.62*

*5. வ.சுப.மாணிக்கம் தெளிவுரை - திருக்குறள்அதி.109 ப.225*

*6. ஞா.மாணிக்கவாசகன் உரை -நாலடியார் பா.எ.395- ப.158*

*7. திருக்கண்ண பரத்தலத்தான் -குறுந்தொகை மூலமும் உரையும் பா.எ.2 — ப.9*

*8. மேலது - பா.எ 72 — ப.107*

*9. .வ.சுப.மாணிக்கம் தெளிவுரை -திருக்குறள்அதி.109 ப.225*

*10. திருக்கண்ண பரத்தலத்தான் - குறுந்தொகை மூலமும்உரையும்பா.எ.119 — ப.155*

*11. வ.சுப.மாணிக்கம் தெளிவுரை -திருக்குறள்அதி.109 ப.225*

*12. திருக்கண்ண பரத்தலத்தான் - குறுந்தொகை மூலமும்உரையும் பா.எ.158 — ப.187*

**துணைநூற்பட்டியல்**


1. திருக்கண்ண பரத்தலத்தான் -குறுந்தொகை மூலமும் உரையும்
-முல்லை நிலையம் ,தி.நகர்,சென்னை-17

2. ச.பாலசுந்திரம் உரை -தொல்காப்பியம் பொருள் அதிகாரம்

3. கழக வெளியீடு -நம்பியகப்பொருள் விளக்கம்
அப்பர் அச்சகம் சென்னை

4. வ.சுப.மாணிக்கம் தெளிவுரை - திருக்குறள்
-தென்றல் நிலையம், மேல சன்னதி, சிதம்பரம்

5. ஞா.மாணிக்கவாசகன் உரை -நாலடியார்
உமா பதிப்பபம்,58,ஐயப்ப செட்டித் தெருசென்னை-600001

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ISSN: 2582-399X

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2021, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com
✉ aranjournal@gmail.com
✆ 72995 87879